# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

**நிலையறிபரீட்சை – 2021**


## சித்திரம் I,II

| பெயர் ∴ சுட்டெண் :- ………………… | தரம் :- 6 | நேரம் :- 2 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதிI

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.**

1 தொடக்கம் 5 வரையான வினாக்களுக்கு கீழ்வரும் ஒளிப்படத்தின் துணையுடன் விடை எழுதுக.



1. அராபிய வியாபாரிகள் வணிகத்தின் பொருட்டு இலங்கைக்கு வருகை தந்ததன் விளைவாக ……………………….எனப்படும் இக்கட்டிடம் கட்டப்பட்டது.
   (1) பள்ளிவாசல் (2) குர்ஆன்
   (3) விக்கிரகம் (4) நினைவுத்தூண்

2. இக்கட்டிடம்…………………………….சமயத்தவர்களின் வழிபாட்டுத் தலமாகும்.
   (1) இந்து (2) பௌத்தம்
   (3) இஸ்லாம் (4) கிறிஸ்தவம்

3. இக்கட்டிடத்தின் நுழைவாயிலுக்கு நேர்மேலாக கட்டிடத்தின் மேல்க் காணப்படும் கூர் நுனிப்பகுதியுடன் கூடிய விசாலமான கும்மட்ட வடிவுடன் கூடிய ………… எனப்படும் சிகரம் அமைக்கப்பட்டுள்ளது.
   (1) மினார் (2) குப்பா
   (3) கூர்நுனி (4) அண்டம்

4. இந்த வழிபாட்டுத்தலத்தின் இருமருங்கிலும் காணப்படும் விசேடமான உருளை வடிவான உயரமான அழகிய தூண் ……………….. என அழைக்கப்படும்.
   (1) சிகரம் (2) உச்சி
   (3) மினாரத் (4) தூண்

5. இவ்வழிபாட்டுத்தலத்தின் சுவர்கள் அரபி எழுத்துக்கள், ……………….. வசனங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும்.
   (1) குர்ஆன் (2) ஓவியங்கள்
   (3) காட்டுருக்கள் (4) பிறைகள்



kalvi.lk

6 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

6. நிறக்கடதாசித் துண்டுகளைக் கொண்டு கிழித்து ஒட்டிச் செய்யப்படும் சித்திரம்
   (1) மொசாக் (3) கொலாஜ்
   (2) கிறபிக் (4) பரவரூபச் சித்திரம்

7. நீலம்,மஞ்சள்,சிவப்பு ஆகிய வர்ணங்களை சம அளவில் கலக்கும் போது பெறப்படும் வர்ணம்
   (1) ஊதா (3) செம்மஞ்சள்
   (2) கபிலம் (4) கறுப்பு

8. உலகெங்கிலும் வாழுகின்ற பௌத்த மக்களின் சிறப்பு மிக்க நாள்
   (1) சித்திரப் பௌர்ணமிதினம் (3) றம்சான் பண்டிகை
   (2) வெசாக் பௌர்ணமிதினம் (4) முழுநோன்மதிதினம்

9. கோலம் ஒன்றில் இருக்க வேண்டிய முக்கிய பண்புகளில் ஒன்று
   (1) இயற்கைப்பண்பு (3) முப்பரிமாணப் பண்பு
   (2) பிரகாசத்தன்மை (4) வர்ணப்பொருத்தம்

10. இந்துக்களால் தைமாதத்தின் முதல் நாளில் கொண்டாடும் விழா
   (1) தீபாவளி (3) ஆடிப்பிறப்பு
   (2) தைப்பொங்கல் (4)சித்திரைவருடப்பிறப்பு

11 தொடக்கம் 15 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

11. சித்தார்த்தகுமாரனின் பிறப்பு, புத்தர் நிலையை அடைதல், பரிநிர்வாணமடைதல் ஆகிய மூன்று நிகழ்வுகளை முன்னிறுத்தி பௌத்தர்களால் கொண்டாடப்படும் பண்டிகை எது?
   (1) ரம்சான் (2) வெசாக்
   (3) வருடப்பிறப்பு (4) கிறிஸ்மஸ்

12. இந்து ஆலயங்களில் சிவபெருமானின் வாகனமாகக் கருங்கல்லில் செதுக்கப்பட்டிருக்கும் விலங்கு உருவம் எது?
   (1) எருது (2) சிங்கம்
   (3) நாய் (4) புலி

13. இந்துக்கள் தைப்பொங்கலின் போது நிலத்தை அழகுபடுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் அலங்காரம் எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?
   (1) காட்டுரு (2) கோலம்
   (3) மின்குமிழ் (4) நிறைகுடம்

14. இலங்கையின் தாதுகோபங்கள் இந்தியாவின் எந்த தாதுகோபத்தைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளது?
   (1) பாரூட் (2) அமராவதி
   (3 சாஞ்சி (4) அபயகிரி

15. தாதுகோபத்தின் பிரதான மூன்று பகுதிகளும் எவை?
   (1) அண்டம் அடித்தளம் தூபி (2) பாதம் சுவடி சிகரம்
   (3) தூபி கலசம் பாதம் (4) அண்டம் மினார் கலசம்



kalvi.lk

16 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்கு பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளிநிரப்புக.

16. அப்புதல் கட்டியெழுப்புதல் எனும் நுட்பமுறையில் சிற்பங்களைச் செய்ய ……..… மிக இலகுவான ஊடகமாகும்.

(1) களிமண் (2) செங்கல்
(3) ரெஜிபோம் (4) மரம்

17. அநுராதபுரத்தில் அமைந்துள்ள ருவான்வெலிசாய தாதுகோபத்தின் அண்டம் ……………… வடிவமுடையது.

(1) மணி (2) தாமரை
(3) நீர்க்குமிழி (4) குடம்

18. இந்து ஆலயங்களில் மூலமூர்த்தி வைக்கப்பட்டிருக்கும் இடம் …………………எனும் பெயர் கொண்டு அழைக்கப்படும்.

(1) கருவறை (2) விமானம்
(3) கோபுரம் (4) வாயில்

19. இஸ்லாமிய மதத்தவர் ……………………………… பண்டிகையைக் கொண்டாடுவர்.

(1) நத்தார் (2) தீபாவளி
(3) ரம்ழான் (4) வெசாக்

20. பச்சை வர்ணத்தின் எதிர் வர்ணம்…………… வர்ணம் ஆகும்.

(1) நீலம் (2) மஞ்சள்
(3) சிவப்பு (4) ஊதா

(20x2 = 40 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන

பகுதி III

விரும்பிய **ஒன்றைத்** தெரிவு செய்து வரைக.

1. எங்கள் பாடசாலைத் தோட்டம்
2. வாசனை மலரும் வண்ணத்திப் பூச்சிகளும்
3. பிறந்தினப்பரிசுப் பொதிக்கான உறைக்கு அலங்காரம்
4. புத்தக அட்டை ஒன்றை வரைந்து வர்ணம் தீட்டுக.
5. கேத்திர கணித அலங்காரங்களைக் கொண்டு பரவ உருவமுறையில் அமைந்த சீத்தைத்துணி அலங்காரம்

(40 புள்ளிகள்)



kalvi.lk

பகுதிII

கீழே தரப்பட்டுள்ள பொருளுக்கு முப்பரிமாண முறையில் வர்ணம் தீட்டிப் பூரணப்படுத்துக.

(20 புள்ளிகள்)





kalvi.lk

# GRADE 6,7,8

## STUDY WITH US..!

# SCIENCE

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.



| TAMIL MEDIUM | ENGLISH MEDIUM |
|---|---|
| 850/= Monthly | 1000/= Monthly |

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page